அருட்சோதி மலர் - 2

# அருள் சிவம்



MARAIMALAI
LIBRA
MADRA
★ சென்

திரு. சாம்பசிவம்

1926

# முன்னுரை

திருவருட் ஜோதி யென்னும் அரிய நூன்மலர்களை யான் வாசித்தகாலை அதிற் செறிந்துள்ள அரும்பொருள் யாவும் அத்வைதத்தைக் குறிக்கின்றதே யன்றி வேறில்லை யென்பது என் மனத்திலெழுந்த துணிபு. இவ்வரிய நூலில் ஸ்ரீமத் இராமலிங்க ஸ்வாமிகள் பாடிய திருவருட்பாவை யாதாரமாகக் கொண்டு அவ்வினிய பாசுரங்களிற் பொதிந்துள்ள அரிய அத்வைதக் குறிப்புகளை யாவரும் எளிதிலறியும்படி வசன ரூபமாய் இன்னும் பல வேதாந்த கிரந்தங்களின் மேற்கோள்களைக்கொண்டு நன்கு விளக்கியிருக்கிறது. சுருங்கச் சொல்லில் இவ்வரிய நூலில் அத்வைதமென்பது வார்த்தை யளவில்லாமல் ஒருவன் தன்னரிய அனுபவமனைத்தையும் உள்ளபடி உணர்த்துவதாகவே யிருக்கிறது. ஆகையால் இப் புத்தகத்தின் அருமையை அனுபவ அத்வைதிகள் நன்கறிந்து சிலாகிப்பாரென்றே நம்புகிறேன்.

மற்றும் எனது ஆன்ம நேயரான ஸ்ரீமான் சாம்பசிவ முதலியார் திருவருட்பாவிலுள்ள சுவாமிகள் சுத்தானுபவமனைத்தையும் தானடைதலன்றி ஏனையோருமடைய வேண்டுமென்றே இப் புத்தகத்தை வெளியிட்டது முன்னிட்டு யாவரும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளாரென்பது சொல்லாமலே அமையும்.

இத்தகைய அத்வைதச் சுவை ததும்பித் துலங்கும் திருவருட்பாவைப் பாடியருளிய இராமலிங்க ஸ்வாமிகளின் சமாஜத்தை இச் சென்னையம்பதியில் ஸ்தாபனஞ்செய்து அதன் முன்னேற்றத்துக்கு எவ்வகையிலும் உழைத்துவரும் இந் நல்லாருக்கு எல்லா நலமும் உண்டாவதாகுக.

நாகை - அருணாசல சாஸ்திரி,
*Lecturer, Vedanta Philosophy,*
*The Madras Progressive Union School, G.T. Madras.*

# தெளிந்து தெரித்தல்

அருட்ஜோதி நான்காம் மலரென்று சென்னை சமரஸ சன்மார்க்க சங்கத்தினரால் இம்மலர் "அருள் சிவம்" பிரசுரிக் கப்பட் டுள்ளது. நம் நண்பர் திரு சாம்பசிவ முதலியார் தென் இந்தியாவின் பல திவ்ய க்ஷேத்திரங்களி லுபன்னி யாஸித்த சொற்பொழிவுகளை இம்மலர் கொத்துகளாகக் கொண்டுள்ளன. திருவருட் பிரகாஸ வள்ளலின் பெருமை களை இந் நண்பர், ஆங்காங்கு சென்று கூறியுள்ள உண்மை களை நோக்கும்வண்ணம் இவைகளை வாசிப்பவர்கள் தம் உள் ளங்களில் கசிவுகொண்டு உண்மைப் பொருளில் மூழ்கலாகும் என்பதும் எனது அனுபவமாக உள்ளன இந் நண்பர் தம் அறிவின் பற்றனைத்தையும் அணி அணியாக அருட் பாவிலிருந்து எடுத்துரைத்துள்ள தனிமையை அறிந்துணர முன்படின் இவரின் மனோவிருத்தி எங்ஙனம் வள்ளலின் கொள்கையில் சீரிய விவேக விருத்திகளைக் கொண்டொழுகத் தலைப்பட்டுள்ளன வென்பது கூறாமலே விளங்கும். திருவருட் பிரகாஸ வள்ளலெனும் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் பேரனுபவம் இம்மலரின் வாயிலாக எளிய இனிய வசனங் களில் நன்கு புலப்படுகின்றன. ஆகையினால் இம்மலர் உண்மையாம் உயரொளி ஆண்டவனை நெருங்கி மண்பெண் பொன் என்ற மயக்கேறி மானிட உடல் தாங்கிய தமிழ் மக்கள் வருந்தாதிருக்க பல உட்கருத்துகளையும் விளக்கங் கொண்டுள்ளன வென்பதற் கையமேயில்லை.

அற்புதானந்த சுவாமி,

**உபதலைவர், அருட்பிரகாச சமாஜம், சென்னை**

# அருள்சிவம்

## 1. தனிநிலை இயல்பு

### SELF REALIZATION

(பழனிமலை)

தனி யென்பது மூன்று அவத்தைகளையும் நன்று விசாரித்து வாதனு வசத்தில் வருகிற விருத்தியைக் களைந்து அவ்விருத்திகள் அடக்கத் துருத்திபோல ஊது மூச்சை ஓரிட மமர்ந்தி யூன்றி நிற்றலே சிவயோக நிலை. தனியென்பது சுத்தசித்து நானென்ற திடத் தீர்மானம். நானே நீ, நீயே நான் ஆகையால் ஞானகுரு தன்னறிவைத் தவிர வேறின்மையால் சுத்தசாதகர்கள் ஊன் பிறந்த வுடலைச் சுமப்பது பாரமென்று எண்ணி ஏன் பிறந்தோம் என்ற ஏக்கமே தங்கள் வாழ்நாள் முழுதும் குடிகொண்டு பண்டைக் காலத்திற் செய்த புண்ணியத்தின் பலனாக, புதிய நிலையாகிய தான் பிறந்த விடமான வான்பிறந்த வனத்திற் சஞ்சரித்துக்கொண்டு உள்ளக்

கோயிலை யூன்றிப்பார்ந்து தம் மிதயத்துட் காணவேண்டிய பொங்கு பேரொளியே தனிநிலைஇயல்பாம். ஆகையினுலே நான் எல்லாப்பொருட்கும் அறிவாய் நின்றேன். தேகமாதிகளுக்கப்பால் சிதம்பரவடிவானேன். அதிரகசியமாம் அறிவினில் அறிவாய் நானென்று வுணர்ந்த வாநனையு மாண்டு வூனுமிலை வொன்றென்று சொல்வதற்கு உரையில்லை நாவில்லை அன்றிக் காமென்பதற்கு அறிவில்லை செயலில்லை நன்றுமிலை தீதுமிலை நானுமிலை என்று எங்கெங்கு நோக்கில் அருள்மயமாகி இருந்திடும் நிலை தனிநிலை இயல்பு. தனந் தனியேயிருந்து நின்றவிடம் பரவெளிக்கோயில். இதுதான் சாகாத்தலமென்றும் தூயமெய்ஞ்ஞான நிலையென்றும் ஒன்ருகி உணர்வொருங்கி சித்திரபானுபோல் சிதைவிலாச் சின்மயானந்த வாழ்வே சிவப்பிரகாச நிலையென்றும் சுத்த சாதக நிலையென்றும் ஊனமிலா யோகத்துள் ளொளியென்றும் தானமிலா ஞானமதி யென்றும், அறிவே சிவமென்றும் அறைந்த திருமூலர் திவ்ய முடிவாம்.

சாந்தமுடைய மக்கள் இச் சுத்த சாதக போரவல் கொண்டு வுற்றுணர்ந்த பரிபூரண நிலையே வுயர்நிலையென்று துறவு பூண்டு தாயாரையும் தந்தையையும் மாயுமயல் காட்டு மனைவியையும் மைந்தரையும் வெறுப்புற்று சொப்பனத்திற் கண்ட காட்சியைப்போல் நிற்பவர்களே சுத்த சாதகர்கள். இவ்வகைச் சாதகர்களன்ருே நம் திருவருட் பிரகாச வள்ளலார் சொல்லிப் போந்த ஞானிகள்? ஆன்மதரிசன மென்பது சச்சிதானந்த வடிவம் நம் வடிவம் யென்றே மகிழ்ந்திருத்தல். இதைத்தான் நழுவாநிலையென்றும் தற்பதம் நான், தொம்பதம் நீ சாற்றும் அசிபதம் இம்முப்பொருளும் முடிவு கண்டு

மூர்த்தி பாவனை அற அகண்டாகார சிவபூசை செய்வ தன்றோ நம் குருநாதன் மொழிந்த மொழி.

மற்றும் ஒரு கோடி சூரியர்கள் ஒரே காலத்தி லுதித்தாலும் எப்படி அந்தகர்க்கு இருள் அகலாவோ அத்தன்மையைப்போல் எந்தனை தான் கற்றாலும் கௌரவமே கைக்கொண்ட கைஞ்ஞானிகட்கு சுத்த சாதக தனிநிலை எவ்வாறு விளங்கும்? தான் யென்பது என்ன? நான் யென்பது என்ன? உண்மை யென்பது என்ன? உலகமென்பது என்ன? அறிவு யென்பது என்ன? அயல் என்பது என்ன? சிவமென்பது என்ன? சீவன் என்பது எனன? பதியென்பது என்ன? பசுபாச மென்பது என்ன? என்ற இவ் வகைபான விசாரணையால் வந்த தீர்க்க தீர்மான அறிவே சிவலிங்கம். அன்பே அபிடேகம். அத் தெளிவே அருட்சோதி நிலை யென்றும் நம் சுவாமிகள் ஆங்காங்கு அருட்பாவில் நயமுடன் நல்லோர்கள் நலம் பெறவே நன்மொழி யான அனுபவ மொழியால் அருட்பாவில் ஆரவாரித்து இருக்கின்றனர்.

நானெனும் பொருளைக்கண்ட ஞானிகள் ஞானம் ஆகாயமாவர். இதுதான் "அம்பலத்திலாடுகின்ற வெண் ணிலா"வென்று நமது திருவருட்பிரகாச வள்ளல் அன்பு மீக்கால் நம்மவர்களுய்யவேண்டி நயநயமாக எளிய நடையில் விளக்கிக் காட்டியிருக்கின்றனர். இத்தகையான நம் சுவாமிகட்கு யாம் என்ன கைம்மா றளித்தோம்? ஃதன்றோ புண்ணிய மூர்த்திகளின் பெருமை! எண் ணத்தினால் வந்த விளைவே உலகத்தில் நிரம்பியுள்ள கொடுமைக்கெல்லாம் காரணமென்றால், அந்த எண்ணம் வராவகை தடுப்பதற்கும் அவ்வகை தடுத்தக்கால் உண்

டான ஒருவித போதமே சச்சிதானந்த நிலையென்றும் தனிநிலை இயல்பென்றும் தக்கோர் கூறியுளர்.

"If we can stop all Thought, then we know that we are beyond Thought. We come to this by negation. When every phenomenon has been negatived whatever remains That is It, [Swami Vivekananda].

நினைவென்ற சங்கற்ப நிசவடிவை நோக்கில்
தனையன்றி வேறில்லை தங்கத்தில் பணிதியைப்போல

நிசசொரூபம் கண்டு காண்பதெல்லாம் தன்னுருவாய்க் கண்டும் அதுவிதுவென் றிடமில்லா அகண்ட பரிபூரண மாய் பொது நடம்புரிகின்ற பூரண வடிவே என் வடிவென்றும் அனைத்தும் என் சொரூபமென்றும் இவ் வடிவம் நாம் அல்லவென்றும் அவ்வடிவை நோக்கு மிடத்தில் அனைத்தும் அம்பலமென்றும் நமது அன்னையார் அருட்பாவில் முழுதும் ஆரவாரித்திருக்கின்றனர். காண்பானுங் காட்சியுமற்ற சுத்த வெளியிலே விளங்கு மனுபவம் நம் நிச சொரூபம். இவ்வெதார்த்த சொரூபம் என்பது தன்னை இன்னதென்று தெரிந்து விசாரித்து சர்வமும் தன்னுள்ளடங்கி யிருக்கின்றதென்று நன்று தெரிந்து புறத்திற் காண்பதெல்லாம் அகத்திலுள்ள தென்று தெரிந்த சுத்தசுவானுபவ விளக்கமே கடவுள்.

நாமரூபத்தைப் பொய்யாகக் கண்டவிடத்து ஒரு பொருளுண்மையின் பேரனுபவம் நன்றாகத் தெரியும். நினைவிற் றோன்றுங் கற்பனை யெல்லாங் கடந்து ஒரு விகற்பங்களு மில்லா விடமே நினைப்பற்ற விடம். அங்கு இங்கு எங்குமுள்ள தெதுவோ அதுவே தன் சொரூபம்; எல்லாம் நாமேயென வறிந்தால் எதை

நினைவா னினைத்திடுதல் கூடும். ஆகையால் சர்வம் ஈஸ்வரமயம் என்ற ஓர் உண்மைத் தெளிவே உத்தாரஞான சிதம்பரமென்றும் சித்தியெலாந்தரும் அம்பரமென்றும் நம் இராமலிங்கசுவாமிகள் திருவருட்பாவில் திருவாய் மலர்ந்தருளினர்.

" Ishwara is the sum total of individuals."

" The highest man cannot work for there is no binding element, no attachment, no ignorance in him" [Swami Vivekananda]

## 2. சச்சிதானந்தம்

## SATCHITHANANDAM

(திருவானைக்காவல்)

எல்லா உயிர்களிடத்தும் நிரம்பியுள்ள அருளொளி யாம் சன்னிதானத்தில், சின்மாத்திர அசைவால் எல்லா உலகங்களுந் தோன்றி, விரிந்து, அடங்கிப் பூவின் மணம்போல் மெய்ப்போத வின்ப வண்ணமாகி சரீரமுழுதும் இயலறிவின் பிரகாசம் வியாபித்து விக சிக்கும் வண்ணந் தெரிந்து கொள்வதே சச்சிதானந்த நிலையின் கருத்தாம்.

எல்லா உலகங்களும், எல்லா அண்டங்களும் எல் லாப் பிண்டங்களும், தன்னனுபவத்தில் ஒரு சிறு அணு வாகக் காண்கின்றபோது, தன்னியற்கையான சுத்த அறிவின் மயம் எவ்வாறெனத் தங்கள் தங்களுக்கே ஒரு வாறு புலப்படும். சுயம்பிரகாச வடிவமாய் திருசியமி யாவற்றிற்கும் அனுதியாயுள்ள ஆத்மாவில் திருசியநோக் கிழந்து, நிலைத்திருத்தலே சச்சிதானந்த மெனப்படும்.

வேதமுதலாயுள்ள நூல்களிலும் சொல்லப்பட்ட பொருள் யாதோ, அந்தப்பொருள், சுத்த அதிகாரி கட்கு நன்கு விளங்குமாறு உள்ளங்கை நெல்லிக்கனி போற் காட்டி, அவர்களைப் பேரானந்த நிலையில் ஆழ்த்தத்

தக்க ஒப்பற்ற இவ்வருட்பாவன்றோ நாம் இக்காலத்தில் கைக்கொள்ளப்பட்ட கைகண்டவேதம். நம் சுவாமிகள் நாமெல்லாம் நன்மையடையும்பொருட்டு, சுத்தாத்துவைத சாம்ராஜ்யத்தைத் தன்னனுபவந்தன்னிலும், தன்னியலறிவிலும், அவ்வறிவினுக்கறிவிலும் சுத்த விளக்க அனுபவமாகிய அவ்விளக்கமே தானென்று உண்மை நிலையாகத்தோன்றி, முழுதுங்கலந்து தன்மயமதாக்கி சுத்த அனுபவ நிலையீதென்று காட்டி இன்பநிலை மூட்டி வளர்கலைபோல மேன்மேல் சிறப்புண்டாகி, தனக்குத்தெரியாமலே பலருக்கும் உபகாரமாக பேரனுபவங்களை தன்னை யண்டினவர்க்கு ஊட்டி, நிறையச் செய்கின்ற எந்தப் பெருங்கருணை யமுதமோ, அதைத் தான் பேரனுபவ விளைவில் விளையமுத மென்றும், அவ்வமுதத்தை உண்டுகளித்த பல சத்துவ ஆன்மாக்களில் தோய்ந்த சுத்த அனுபவத்திலும் சம்பூர்ண நிலையீதென்று புலப்படும். இதைத்தான் அழியாத நிலையென்றும், சுகமென்றும், சுகாதீதமென்றும், சுத்தசிவ சன்மார்க்க நிதியென்றும், அருட்பெருஞ்சோதி யென்றும், நடராஜபதியென்றும், நம் அண்ணலார் அருமறையான அருட்பாவில் அருள்மொழி பொழிந்தனர்.

விசும்பினின்று பொழியும் மழையானது பல காரணங்களுக்கு எப்படி பிரயோஜனப் படுகின்றதோ அத்தகையாகவே தன்னுடைய சுத்தானுபவ விசும்பினின்று வந்த விளக்கானுபவ நுண்ணிய அநுபவத்தின் உட்கருத்தாம் வாரியை பக்குவர்க்கே பயன்படுமென்பது இவ்வறிவிலியின் துணிபு. ஆனந்தநிறைவாம் அனுபவம்வாயிலாக வந்துள்ள சுத்த சுவானுபவ மெய்ஞ்ஞான சித்தியனுபவப் பெருமான், தற்காலம் பக்குவ ஆன்மா

களுக்குத் தோன்றுந் துணையாயும், மற்றையர்க்குத் தோன்றாத் துணையாயும், திருவருள் உலகவதிகாரம் செலுத்திக்கொண் டிருக்கின்றனர்.

இதுகொண்டு நம் சுவாமிகள் அறிவே வடிவாய், அறிவே உருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய் அறிவே அறிவாய், அறிவே அனுபவமாய் அனுபவிக்கத் தெரிந்தவர் எவரோ, அவரே சம்பூர்ண நிலை வாய்ந்தவ ரென்று கூறியிருக்கின்றனர். இங்ஙனம் மனத்தைத் தன்வசப்பட முயலுவோன் நாளடைவில் நான் சரீர மன்று, நான் தேகாதி பிரபஞ்சங்களன்று, என்ற நிர்மானத்தில் ஒருவித இலக்ஷியமான சுத்த விவேகம் விளங்கும். அவ்விவேகம் யாதெனில், நான் நாமரூப பிரபஞ்ச கற்பிதனல்ல. நான் என்பது என்னை மறைத்து சுத்த வியாபக விளக்கத்தில் ஈடு படாமல் தடுத்த புண்ணியக் குறைவான நான் நானல்ல. நான் சுயப்பிரகாசன், நான் சமயாதீதன், நான் சம்பூரணன், நான் சங்கற்பாதீதன், என்கிற பேரனுபவவாக்கியங்களை நன்றாகச் சீர்தூக்கி, நியதிகளைந்து, செத்த சவம்போலத் திரிகின்றவன் எவனோ அவனே நம் கடவுள், நம் சச்சிதானந்த சிவம்.

Beyond Time, beyond space, beyond the relative realms of causation lies that ineffable Sat, Pure Being, of which nothing can be said or thought of, though all things, are, in and of it, and of it alone. They call it the Absolute, for even the term God would appear to involve a duality. Changeless, deathless, nameless, attributeless, is the great source of all phenomenal Existence.

SWAMI RAMALINGAM.

சர்வ வியாபகமுள்ள இப்பூரண விவேகம் வந்த காலத்து, நிகழும் பேராற்றலே சுத்த அனுபவமென்றும் இவ்வனுபவ பேராற்றலின் இறுதியில் விளங்கும் ஆனந்தமே நாளைவரும் இறத்தல் என்னும் துக்கப் பெட்டியைத் திறக்கும் திறவுகோல். இத்திறவுகோல் சிலரிடத்தே காணப்படுகின்றது. இத்தகையோர்களைக் காணவேண்டுமானால், நமக்கு ஏராளமாகப் புண்ணியம் வேண்டும். இப்புண்ணியம் எத்தகை வருமெனில், இத் தேகத்தால் உண்டாகிய கஷ்டம் எப்பொழுது ஒழியுமோ என்ற ஏக்கம் ஊடுருவிவந்தாலன்றி, மற்றெவ் வகையாலும் சித்திபெறா. புண்ணிய ஆத்துமாக்கள் கூட்டுறவாலன்றி இவ்வரிய காரியங்களெல்லாம் மற்றெவ் வகை யாற்றலாலும் சித்தி பெறா. சித்தி யென்பது, நினைத்த வண்ணம் நிகழுதல்' நினைப்பு என்பது என்ன? மறப்பு என்பது என்ன? நினைப்பு மறப்பு என்பது, ஜலத்திலுண்டாகும் அலையைப்போல் காணப்பட்டுப் பிறகு நீராவது ஒக்கும். ஆகையால் நினைப்புக்கும் மறப்புக்கும் தலம் ஒன்றே. துக்கத்துக்கும் சுகத்துக்கும் இடம் ஒன்றே. தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இத்தகையே. இதைப் போன்றன பல உளவாம். ஆகையால், நம் முக்கிய கருத்திற் புகுவோம். அது யெதுவெனில் நம் வாழ்நாளில் உண்டாகிய தோற்ற மாத்திரமான அற்ப சுகம், வீடு, காணி, தோட்டம், கால்வாய், வயல், பெண்டுபிள்ளை முதலான சுத்தவா பாச நெறிகளில் மனஞ் சிக்காமல் சின்மயானந்தவியாபகத்தில் சீர்குலையாமலிருத்தலே நம்மாண்டவர் சொல்லிய கருத்தின் முடிவு.

அழிவுடைய பதார்த்தம் யாவற்றிலும் மனக்கண் புதைதது, மனம் துரிசேறி, அம் மயமாதலே அம்மனதி

னியல்பு. அதனை நற்சங்கப் பயிற்சிலாவது, நல்லருட் கேள்வியிலாவது, பன்முறை இழுத்து விளக்கானுபவத்தில் பதியவைத்தலே சுத்த மெய்ஞ்ஞானநிலை. ஒருவன் பலகாலும் தேகக் கஷ்டப்பட்டு சேமித்துள்ள பொருள் பிறகு வாழ்நாட்களுக்கும், பெண்டு பிள்ளைகட்கும் உதவுமென்று எண்ணுகிற அற்ப அறிவானது தன்னியலறிவு வந்தகாலத்து எப்படிப் பொய்யாய் முடிகின்றனவோ அத்தகையாகவே, சுத்த நிற்குணமாம் இதயாம்பர வெளியில் விளங்குகின்ற சுடரொளியின் வியாபகம் ஒன்றே நாம் இம்மானிட தேகத்தில் அடையத்தகுந்த பெரும்பேறென்று, துணிவுகொண்டு இதர விஷயங்களில் மனத்தைச் செல்லவொட்டாது தடுத்தலே அகத்துறவின இலக்கணமாம்.

சாதனை யொன்றில்லாவிடில் சுத்த சாதகம் எவ்வாறேற்படும். இதைத்தான் நம் தாயுமான சுவாமிகள்,

"மறக்கின்ற தன்மை யிறத்த லொப்பாகு
மனம மொதன்றிற்
பிறக்கின்ற தன்மை பிறத்த லொப்பாகு
மப்பேய்ப் பிறவி
யிறக்கின்ற எல்லைக் களவில்லையே யிந்தச்
சென்ம வல்ல
றுறக்கின்ற நாளெந்த நாள் பரமே
நின்றொழும் பனுக்கே."

"ஒளியே யொளியி னுணர்வே யுணர்வி
னுவகை பொங்கும்
களியே களிக்குங் கருத்தே கருத்தைக்
கவளங் கொண்ட

வெளியே வெளியின் விளைசுக மேசுகர்
வீறு சண்டுங்
றெளியேன் றெளிந்த வரைப் போற்றிலே
னென்செய் குவனே."

மேற்சொன்ன விஷயங்களில் ஈடுபட்ட மனம் விகற்பத்தால் அளவுபடா ஒன்றை, மாசற்றவெறு வெளியை மனவெளியி லடைப்பதே சம்பூர்ண நிலை யென்றும், சச்சிதானந்த விளைவென்றும் உண்மையாம் சிவப்பிரகாசம் வெளியினுள் விண்முதற் பூதம் யாவும் விளங்கிடும் என்ற அனுபவமே போக்குவரவில்லாத பூரண நிலையென்றும், பற்றறப் பற்றிய பெரியோர் பரவிய வான்பொருளென்றும், தெரிந்துணர்ந்த சம்பூரணர்கள் சாந்த மனமென்னும் ஆனந்தகிரியின் மேலேறி சிதாகாயத்தில் வீற்றிருக்கும் பெரியோர்கள் கற்பனை நிறைந்துள்ள நாமரூபப் புலைச்சேரிக்கு ஒருகாலும் வரமாட்டார்கள்.

இதைத்தான் ஒழுவிலொடுக்கத்தில் நெருப்பின் கண் விறகு தோன்றாதது போலும், நெய்யில் பால் தோன்றாதது போலும், தன்னில் நான் றோன்றாதது போலும் விளங்கி நின்ற அனுபவமே, நம் சுவாமிகள் சொல்லிப் போந்த சமாதியின் இலக்கணம். ஈதன்றோ சச்சிதானந்த நிலைக்கு வழிகாட்டும்.

இம்மட்டும், திருவருட் சம்மதத்தால் சொல்லி நிறுத்துவோம்.

# 3. சுயம்பிரகாச விளக்கம்

## SELF EFFULGENCE

(சிதம்பரம்)

தன்னை யறிதலே தலைவனை யறியும்வழி. தலைவன் என்பது மெய்ப்பொருள். நல்லனவற்றை நன்கறிந்துன்னி உணர்ந்தாய்ந் தனுபவ வாயிலாக விளங்கும் உண்மைப் பொருளே கடவுள் நிலை. உண்மை நிலைத் திறத்தை நன்கறிந்த நன்மகன் அவ் வுணர்ச்சியில்லாவிடின் ஓர் சிறிதும் எடுத்த தேகத்தின் கருத்து பயன்படா தென்று தெளிந்து கண்விழிந்த நேரமுதல் கண்துயி லும் நேரம் வரையிலும் சதா நல்லருட் கேள்வியிலே மனங்கசிந் தூடுருவி அருளென்பது இது, உண்மையறி வென்பது இது, வாய்மை யென்பது இது ஈதெல்லாம் நீங்கி நின்ற பொய்யறிவின் வியாபகம் தனக்குத் தெரியா மலே யொழிந்து விடுதல்போல் பூர்வ புண்ய திருவருள் விளக்கத்தால்கடவுள் நிலை யீதென எளிதிற் புலப்படும்.

சமயச் சார்பு, மதச் சார்பு இன்னும் பற்பல சொரூபத்தடைக் கேற்பட்ட சட்ட கட்டங்களெல் லாம் விசாரிக்கு மீற்றில் அறிவின்மையைத் தருமே யன்றிப் பிறிதென்னை? உண்மை யறிவுடைய மஹான்

கள் தத்தமுறைழப்பால் நன்குணர்ந்த மெய்ப்பொருள் ஐம்பொறிகளின் முன்னர் உலகமாகத் தோற்றுதல் தவிர உலகத்திற்கு வேறு பொருளில்லை. உலகமென் பது உயர்ந்தோர்மாட்டு உண்மைப் பொருளாகவே யிருக் கின்றது. சுவர்க்க நரகமென்பது தன்னைத் தவிர வேறே யோர் பிரத்தியேகமான இடமிருக்கிறதென்று நினைக்கு நினைவு, விசாரிக்குமளவில் கன்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள் வாயிலாகத் துன்ப இன்பங்களை யனுபவித்தல் நரக சுவர்க்கமுமாம்.

மெய்யறங்கள் கைவருதற்கு ஈசனருளை நன்கு சிந்தித்து மெய்ப்பொருளைச் சேருதற்குரிய குணங்களை யெல்லாங் கைக்கொண்டு, இதய குகையில் இன்ப நிலையை யடைந்து, போனநிலையாம் ஞானநிலையை ஒரு வாறு நம்மறிவுக் குகந்தபடி ஊட்டின நம் உத்தர ஞான சித்திபுரத் தாசரான சிற் அம்பரம் இராமலிங்க சுவாமிக ளன்றோ! இவர் போனுபவத்தை நன்குவிளக்கக் காலம் போதாமையால் ஒருவாறு சருக்கரை மலைக் குவியிலுலா வும் எறும்புபோல் இச் சிறியேன் திரு அருட்பா வென் னுஞ் சருக்கரை மலைமீது என்னறிவு சிறிது ஏறுதலு மிறங்குதலும் பின் கீழே விழுதலும் மற்றுஞ் செல்லு தற் கிடந் தெரியாம லலைகின்ற இப்பேதையேனை ஓர் பொருட்டாய் நன்கு மதித்த நம் யாழ்ப்பாணம் அம்பல வாண சுவாமிகள் சுயம்பிரகாச விளக்கானுபவ விஷயத் தைக் கேட்டுக் கொண்டவண்ணம் சிற்சிலவற்றை எளிய நடையிற் சொல்லப்புகுவேன்.

சுயம்பிரகாசநிலை என்பது எப்பொழுதுங் குறைவு நிறைவன்றி நிரதிசய விழிப்பில் விழித்து சிவபோத மிழந்தோ மென்கிற வாதனை மாண்டு தேக பெருஞ்

சின்மோனச் செழுஞ்சுடரே சிவமென்றுஞ் சிதம்பர மென்றும் நம் அருட்பிரகாச வள்ளல் கூறுகின்றனர்.

சந்ததமும் மன்னு மெய்ப்பொருளி லக்கியமாய் இரவு பகலொன்றுந் தெரியா சுத்த வியாபக அறிவு நாளுக்குநாள் வளர் கலைபோன்ற சித்சொரூப விளக் கொளி விளங்கி, வாசாமகோசர வாழ்வாம் நிலையே என்று மிறவா நிலையென்று ஏங்கி இளைத்த இராமலிங்க சுவாமி கள், சுயப்பிரகாஸ சொரூப நிலை என்னவென்று எடுத் துரைப்பது. எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் போற்றும் அன்பர்கள் மெய்யினியலை நன்கறிந்து நடுநின்று எஞ்ஞான்றும் பூரண வியாபக வறிவெய்துவர். ஆறறி வுள்ள பக்களெல்லாம் ஆத்ப நிலையில் அரசு செய்கிறதினு லன்றோ அவ்வம்பரத்தினின்று விளங்கு மின்பத்தைப் பின்வருமாறு கூறினர்.

> "அம்பலத்தரசே அருமருந்தே
> ஆனந்தத்தேனே அருள்விருந்தே
> பொதுநடத்தரசே புண்ணியனே
> புலவரெலாம்புகழ் கண்ணியனே"

சார்ந்து நண்ணியுள்ள சுவானுபவ நீர்மைகளை நன்கு அறியும்படி திருவாய்மலர்ந்தருளிய திருவருட்பாவின் பெருமையை என்னவென்று கூறுவோம். எவ்வாறுரைப் போம். எத்தகையறிவது. மண்ணுடலை நானென மதித் துக் காமப்பசியால் மடியுஞ் சீவராசிகள் கணக்கிலரென் பதற்கோ ரையமில்லை. சித்தாந்தமே சிவம். அத்திகழ் போறிவாம் பரமநிலை. இவ்வாய்மை நிலைக்குச்சேரவொட் டாமற் றடுக்குந் தோற்றல் மாத்திரமாயிருக்கு மிச்சா சங்கற்பம் நெடுங்கால வாசனையால் போர்த்ததற்கரிதா

யிருப்பினும் தீர்க்க சாதகர்கள் தங்கள் முயற்சியாலும் நூன்முறையாலும் அதனின்றிலகும் ஒழுக்கத்தினுலும் விளைந்த நல்லருட் கேள்வியின் பயனுன சான்றோர் உயர் நெறியனுபவத்தைத நினைவி லேகபாவனை நிலைபெற்று அறி விற் சமபாவனையுஞ் சாந்தியும் சந்தோஷமுங் கொண்டு மற்றுஞ் செய்வான் செயவிரண்டும் சித்தத்தே கண்டு தெளிந்து தூங்குவார்க் கன்றோ சிவம் விண்ணுருவ மென்று வெளிப்படும். மடன் உடைக்கும் வாலறிவு அனுபவத்தால் ஆன்மா பரமாகாச இயல்பாகி அது எல்லாதுளுமுளது என்னும் எண்ணம் வாய்ந்த நிலை சமட்டி பார்வையைத் தருமேயன்றி மற்றெவ்வாற்று னுஞ் சாத்தியமாகா.

சென்றுசென் றேயாவாய்த்
தேய்ந்துதேய்ந் தொன்றாக
நின்றுவிடு மென்றநிலை
நேருநா ளெந்நாளோ — தாயுமானவர்

ஆகையால் நல்லறி வுடையவர்களன்றோ நன்மக்கள். ஏனையோர்கள் எத்தகையரோ! இன்னும் பின்வருவன வற்றால் நன்கு புலப்படும்.

உன்னுதே தேடாதே யூன்றியொரு மந்திரங்கள்
பன்னுதே சாத்திரங்கள் பாடாதே — யெந்நாளு
மப்பாரு மொப்புவமை யானசுகா தீதத்தே
யெப்போதுஞ் சும்மா விரு.
— ஞானசுகாதீத மணிமாலை

சாத்திரங்க ளோதித் தலைவனடி கூடாமற்
சாத்திரங்க ளின்பந் தருமோதான் — சாத்திரத்தைக்
கற்றறிந்து விட்டாற் கதியாகா தப்பொருளைச்
சற்றிருந்து பாராய் தனித்து. — ஞானசாகரவெண்பா

ஏகாந்த நிலையத்து விளங்குஞ் சுத்த விளக்கமே சுயம் பிரகாசம். எப்போது மொருபடித்தாய் உன்னத வனுபவமாய் ஓர் காலத்துஞ் சலனமின்றி சாங்கு சித்தராய் விளங்குவரெவரோ அவரே நாம் வணங்கும் கடவுள். அவரே சுயம்பிரகாச சொரூபி. அவரே எல்லாம் வல்ல இறைவன். யாவனொருவன் ஏகாந்தமாய் விசாரணை செய்யப் புகுவோனுயின் அவனுக்குப் பல தடைகள் நேரிட்டபோதிலும் எல்லாம் திருவருள் வல்லமையே யன்றி யாதினு மனங் குன்றாமல் நாளுக்கு நாள் வளர் கலை போன்ற சுவானுபவ வுதயம் உண்டாகி எல்லா நன்மை தீமைகளையும் அவ்வனுபவ வளர்ச்சியால் ஒன்றுக தெரியா சிவானுபவத்திற் சிந்திக்கு மனது வன்மை குன்றி சிவமயமாம் பேரின்ப வெளியா மொளியை யெய்துவன். இந்நிலைதன்றே யெமதாண்டவர் அருட்சோதி யென்றும் என்றுமிறவா நிலை யென்றுங் கூறினர். இவ்வரிய பெரும் பேரனுபவத்தைத் தெரிந்த சத்துவ ஆன்மாக்கள் உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கமென்று நன்கு தெளிந்து சலனமின்றி சிந்தமே சிவமென்று ஐயந்திரிபின்றி விளங்குகின்றனர். சுயம்பிரகாச மென்றால் முன்னரிருந்த சுத்த பரிபூரணநிலை உலக வாதனையாற் கெட்டு பின்னர் திருவருள் வலத்தால் முன்னே மூடியிருந்த தீபமாகிய சுயம்பிரகாசத்தை மேற்கூறிய வகைகளிலுமுன்று தெளிந்து, போனபொருள் கிடைத்த தென்று பெருமகிழ்ச்சியோடு ஏகாந்த ஸ்தானத்தில் இன்பமுற்றிருப்பவ னெவனோ அவனே சுயம்பிரகாசன். காலமின்மையால் இத்துடன் திரு அருட் சம்மதத்தால் நிறுத்தப்பட்டது.

# 4. ஞான சூரியன்

## ANALYSIS OF TRUTH

(திருவொற்றியூர்)

அகண்ட பரிபூரண சுயம்பிரகாசமே ஞானசூரியன். இத்தகைய நிலையை மறந்த மறப்பே ஜெகஜீவ பரமென் பதற் கிடங்கொடுத்தது. ஆதியில் சுத்தப் பரவெளியி னின் றிலகுஞ் சுயம்பிரகாசம் நின்ற நினைவுக் கெட்டாத போது அருட்சோதி யென்றும் சொல்லெழா வானந்த மென்றுங் கூறுவர் அறிஞர். தானே தானயிருந்து பார்க்கில் விளங்குந் திடத் தீர்மானமே உண்மை நிலைக்கு வழி. இது குன்றிய காலத்து அதாவது தான் வேறு என்கிற பிரிவுண்டாகுங்கால் இச்சிறிய அசைவு மாயை யில் பிரதிபலித்தால் பிரம்மமென்றும் இச்சா மயமாகி அவித்தையிற் பிரதிபலித்தால் சீவனென்றும் தானே தானயிருக்கிறே னென்கிற சலனமுறுமையே சுத்த ஞான சுகோதய மென்றுஞ் சுவானுபூதியர் கூறுவர். மனேவிருத்தி ஞானத்தால் விளங்கும் அகண்டாகார விருத்தியும், விவேகவிருத்தி ஞானத்தால் ஈசுவர விருத்தியும் இவ்விரண்டுங் கடந்து விபுவாக விளங்குவ னெவனே அவனே ஞான சூரியன்.

அபரோட்சானு பூதியர்கள் தன்னிலே தானகத் தெளிந்து சிறிதுங் கலங்காமல் போர்முகத்து வீரர் மன

தொத்த சித்திர தீபம்போல அகண்ட பரிபூரண நிலை யில் சமஸ்த அண்டங்களும் கடுவெளவாகத் தோற்றற் கிலையதலின் அந்நிலையே பரசிவ நிலையென்றும் மாற்ற மன வுணர்வு செல்லாத் தலமென்றும் பற்றிய பற்ற னைத்தினையும் பற்றறவிட் டருளம்பலப் பற்றேயென்று மிறவா நிலையென்று எமதண்ணலார் அணி அணியாக அருட்பாவி லலங்கரித்தனர்.

விளியாத விண்ணொளி வியாபகப் பயிற்சி நாளடை வில் தேகமே ஆத்மா, போகமே முத்தி என்ற கேவல விளக்கமாறி எவ்வுயிர்பாலு முகமலர்ந்து வின்சொல் உரைப்பதும் அளவளாவி அனபு பாராட்டலும் சமரச சமட்டி பார்வையும் நிகழும். இது கேவலம் இது சுத் தம் என்கிற பகுத்தறிவொன்றே மெய். மற்றனைத்தும் பொய்யென வையந்திரிபின்றித் திர்மாணித் தவ்விரு வகை நோக்கு மகன்று சிவசாட்சியாய் நின்றிலகும் சுகாதீதமே ஞான சூரியன். சிற்சில விடங்களில் அருட் பாவி னுட்கருத்தை சுத்தானுபவ விஷயந் தெரியா திரை செயப்புகின், கல்விச்செருக்கு மடமையே தரு மென்க. சுகோதய வொழிவிலே போதம்போ யொன் ருகா வொன்றி னழிவிலே வுண்டான அதீதவின்பமே அறிவின் சுடரொளி. நம் சுவாமிகள் பல தடவை களிலும் கண்ணுற் காணுதலென்பது உன்னுத லென வும் கனிந்துகொள லென்பது ஊடுருவி வுவந்தலெனவும் கலந்துகொள லென்பது உணர்ந்து இலட்சியத்திலுருகு தலுமாம். இன்னும் உட்கருத்திற் புகுவோம். கண் ணென்பது மனம் உண்மையை நெருங்குதலாலும் கனித லென்பது மனக்கசிவு வந்தவிடத்து அழிவில் லாப் பொருளிலே சதா தியானித்தலாலும் கலத்த

லென்பது மனக்கசிவு வந்தவிடத்து அழிவில்லாப் பொருளிலே சதா தியானித்தலாலும் அவ்வமயத்துண் டாகும் ஒருவித நிகழ்ச்சி எல்லாவற்றிற்குஞ் சாட்சியா யும் எக்காலத்திலு மழியாததாயுமுள்ள உண்மையிலே மூழ்கியிருத்தல்.

தத்வமசி என்னுஞ் சுவானுபூதியர் வாக்கியம் நன் காராயுங்கால் தத் = அப்பரம்பொருள், துவம் = நீயாக, அசி = இருக்கிறாய். இதனது போனுபவத்தைக் கவ னிக்கு முன்னர் சீவனுக்குத் தூல வுடலுள்ளதுபோல் ஈசுவரனுக்கு முண்டா? ஆம் உண்டு. அதாவது பூத பௌதிக மவற்றின் காரியகாரண வண்டபிண்டங்களு மாம். சீவனுக்குச் சூக்கும வுடலுள்ளது போல ஈசுவர னுக்கு முண்டா? ஆம் உண்டு. அதாவது காரண காரிய வுடலுமுமாம். சீவனெனும் பேர் வகிக்கு முன் னர் சீவனிலே எப்படி? பூர்ண வியாபகத்திலில்லாக் குறைவி னைசைவே இச்சாம்சமாகிய பூதபௌதிகப் போர்வை போர்த்துத் தத்துவக் குழாங்களோடு கூடித் தடுமாறி நிற்றலாம். பிறகு தத்துவச் சேட்டையின் றன்மை யால் நானெனுமகந்தை வருகிறது. இது சரீர சம்மந் தமா? அல்லது ஆன்ம சம்மந்தமா? சரீர சம்மந்தந் தான்; ஏனெனில் சரீரம் பூதபௌதிக முடையது. இவ்வைம்பூதமும் பின்னல்போல் ஒன்றைவிட் டொன் றகலாமல் ஆகாயத்தைப் பற்றிக்கொண்டேயிருக்கிறது. விதையின்கண் விருட்ச மடங்கினதுபோலும், சுத்தத் தில் அசுத்த மடங்கினதுபோலுமாம். ஆகாயத்தில் மற்று நான்கு பூதமு மடங்கி யிருக்கின்றன. அஞ்சு மூன்று மெட்டடா யனுதியான மந்திரமெனுஞ் சொல் லுக் கியைந்த பிரிதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்,

சூரியன், சந்திரன், ஆன்மா என்கிற அஷ்டமூர்த்திகளை அன்பர்கள் தத்தம் சுவானுபவத்துக் கேற்றவாறு தியான பாவனை செய்கிறார்கள்.

உபாசக னுயிர்விடுவமயத்து அவனுக்குரிய இஷ்ட மூர்த்தியைச் சிந்திப்பானுயி னதுவாகச் செனிப்பன். முன்னிலைத் தியானமில்லா வுபாசகன் வானம் போல வடிவிலதாய்ச் சதா தியானஞ் செய்தும், விசாரணைத் தீர்மானத் தெளிவின் மேலீட்டா லொவ்வொன்றும் யானல யானல வென்றவற்றிற்கு விலட்சணமாகச் சதோதயமாய் விளங்கி நிற்றலும் தானாகிய சிதாகாயத்தில் விலட்சணமாகச் சதோதயமாய் சுத்த பரிபூரண நிலையை யடைவன். அவன்சாதகனன்றுஅவனே சுத்த சிவம். அவனே ஞானசூரியன்,

பின் ஏகாகார நிலையின் விசாரணையிற் புகுவோம்.

காற்றுருவோ கனலுருவோ கடவுளுரு வென்பார்
காற்றுருவுங் கனலுருவுங் கண்டுரைப்பீ ரென்றால்
வேற்றுருவே புகல்வாதை வேறென்றால் மறுத்தால்
விழித்துவிழித் தெம்போல்வார் மிகவு மருள்கின்றார்
தோற்றுமந்தத் தத்துவமுந் தோற்றாத தத்துவமுந்
துரிசாகவவை கடந்த சுக சொரூபமாகி
மாற்றமன வுணர்வுசெல்லாத் தலத்தாடும் பெருமான்
வடிவுரைக்க வல்லவரார் வழுத்தா யென்றேழி.

- திருஅருட்பா

ஆதவனே யொப்பிலாரு மில்லாத வதீதபர
மாதவனே குருதேசிகனே வடிவொன்று மில்லா
நீதவனே முற்று மீரேழுலோக நிறைந்ததிரு
காதவனே யினிநானில்லை நீயில்லை ரெண்டுங்கெட்டே.

— கடவுளந்தாதி

பால்வடிவாகிய பாதத்தைப் பற்றிப் பதைப்பறவே
நூல்வழியே ணிப்படியேறிப் போய்வரநோக் கிப்பின்னே
காலதுகா லடிபோராமற் பார்த்துக் கடந்துமுப்பாழ்
மேல்வெளி பார்த்திருப்பீ ரந்தமின் னொளியே.

— கடவுளந்தாதி

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

— திருமந்திரம்

# 5. சிவசிதம்பரம்

## SIVASCHIDAMBARAM

(திரு அண்ணாமலை)

சித்த சாந்தமே சிவம். சித்தம சாந்தவடிவாகி சிவோகம் பாவித்திருந்தலே சிவசிதம்பரமாம். மனம் உலகாயிருக்குங் காலத்து சித்தம் சலிக்கின்றது. இச் சித்த சலிப்பே நாம ரூபந்தனை நாடி ஜீவனென்கிற பேரடைகிறது. இச்சித்த சலிப்பு வராவகைத் தேடுமிடத்து சீவனது தொல் வடிவம் மெள்ளக் கரைந்து சுகவருள் வடிவாய்ச் சகச நிட்டையாகிய சிவசிதம்பரமாம் வியாபகநிலை விளங்கும். தன்னை யூன்றிப் பார்த்தவிடத்து விளங்கு மனுபவமே பூரணப் பொருளென்றும், போக்கொடு வரவுமிலாப் புனிதமாம் நிலையென்றும் அறிவின்கண் விளங்குஞ் சிற்சோதியென்றும் சூன்யத்திற் சூன்யமாய் விளங்குஞ் சூக்கும விளக்கமென்று மறிஞர் தத்தஞ் சுவானுபவத்திற் கூறியுளார். சுவாசத்தைவிட சுகதுக்க மில்லையென்றும் அச் சுவாசம் சீவநிலையென்றும் அச்சீவன் தெளிவுற்ற காலத்து தான் சித்தென்றும் விளங்குவர். சித்தென்பது எக்காலத்து மழியாததாம். அதாவது பணிக்கு முன் பொன்னிருந்தது போல யானை வாகனத்திற்கு முன் மரமிருந்தாற்போல

இத்தகையான நாமரூபத்தால் விளங்காதிருந்து தநதம நுண்ணுணர்வினீற்றில் விளங்கியது சித்தன்றோ!

இத்தகை சித் விசாரணையுடைய மக்கள் மூவ்விதமாம். (1) அப்பியாசி, (2) அனுபவி, (3) ஆரூடன். முதலில் சிவநிலை தெரிந்த சத்புருடன் இது நான் இது நானென்று நியதி கொளதலாம். இரண்டாவது தினசரி நியதிகளொந்து அதன் முடிவில் விளங்குஞ் சுகநிலையே சிற்சோதியெனத் திடத்தீர்மானம் வாய்ந்தவனெவனோ அவனே ஆன்மானுபவி. மூன்றாவது மற்று ஆரூடனோ சிற்சோதி அனுபவத்தில் விளங்கும் ஏகவெளியே அறிவாய்ப் பேதமுறாது அகமும் புறமும் அறியார்போற் காண்பவனெவனோ அவன் தன்மயமாய் நின்று ஓர் குறியுமில்லாத வுணர் வெளியா மொளியினிடத்துத் தானே சராசரமாய்த் தோன்றி யெல்லாம் வெளியொளியாய் ஏகவறிவாய் என்றைக்கு முள்ளதுவாய் விளங்குவதே சுவசிதம்பர நிலையாம். இங்ஙனம் சிவமென்பது தன்னிலை யிதெனவறிந்து தன்னறிவிற்றானே பூத்து மலர்ந்து விகசித்து விளங்கும் இன்பமன்றோ! இவ்வின்பம் கற்பனைகிதமான கதிரொளி விளங்கும் கனக சபையினிடத்துத் தன்னைச் சிவத்திற்கு ஆளாக்கிச் சிவ பூரணமாய் விளங்குவன். எக்காலத்தும் எவ்விதத்தும் ஆகாயஞ் சாணிடம்போற் கருதுவன். இவ்வறிவுதயம் தனக்கு வாய்ந்தகாலத்து உலகச் சார்பில் வெறுப்புண்டாகி உண்மை நிலையாகிய ஏகாந்த மௌன நிலையாம் சுத்த பரவெளியனுபவ மெய்துவன். சுட்டற்று சும்மாவிருக்கும் சுகோதயமே சித்த விகாரக் கலக்கம் நீங்கி சிவமயமாம் வெளியில் எல்லாவண்டங்களையும் யெல்லாப் பிண்டங்களையுந் தன் சிற்சுகோதயத்தில் காண்கிறான்.

இதைத்தான் நம் இராமலிங்கஸ்வாமிகள் கொன்றைத் தேனேறும் மலர்ச்சடையெஞ் சிவனே யென்றும் தில்லைச் சுடரேயென்றும் ஆனந்தத் தெய்வமேயென்றும் ஊனேறும் உயிர்க்குணிறை யொளியே யென்றும் பன்முறையாக உண்மையாம் உயரொளி ஆண்டவனை நெருங்கி நின் னன்பர்க ளெல்லாம் வானேறுகின்றார் நாளொருவன் பாவி மண்ணேறி மயக்கேறி வருந்துற்றே னென்றால் இச்சிற்றறிவுடையேன் 'எவ்வாறு இவ்வரிய பெரிய பேற்றை யெடுத்துரைப்பது. ஆயினும் நம்முக்கிய கருததிற் புகுவோம் இங்ஙனம் கருத்தென்பது உண்மையை யீதென்று விசாரித்து அது நான் என்னுங் கைஞ்ஞானங் கழன்றேறி நின்றவிடமே சிவசிதம்பரமாம்.

சுத்தாவத்தையாகிய சிவதுரிய வனுபவமே அத்வைதத்தின் முடிபு. அத்வைத மென்பது ஆன்றோர் சங்கையற நின்ற வெளிவொளியாம் விளக்கம். இத்தகை நிகரற்ற வாழ்வை நம் ஆண்டவன் அருட்சோதி அருட்சோதி யென்று அருட்பா முழுதும் அலங்கரித்திருக்கின்றனர். துவிதமாகக் கொள்வதெல்லாம் சொல்வாதத்திற் கிடங்கொடுத்தது இருவினையொப்பு, இருள மலபாகம் வருவதற்கன்றே வகுத்த மாண்பு. சித்தத் தெரிவே சிவநிலையுணர்த்தும். ஆகையினால் நம் சுவாமிகள் உள்ளம் பெருங்கோயில், உள்ளம் பெருந்தெய்வம், உள்ளம் ஒளி வெளி வியாபகமென்று பன்முறையூட்டிய பெருந்தகைப் பெம்மானை நம் அண்ணலாருக்கு யாமெவ்வாற்றானும் கைம்மாறளிக்கப் போகிறதேயில்லை. இங்ஙனம் கைம்மாறென்றால் சொல்லியவண்ணம் நம்மனுபவத்திற்குக் கொண்டுவந்து சீர்தூக்கி சித்த நிலையே

சிவலிங்கமென்று தெளிந்து சுவானுபவத்திற் கூடிய வரையில் முயல்வதாம், திருமூலர் இதைத்தான்.

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே
— திருமந்திரம்

எப்போது மிடையறா வானந்தத்தில் மூழ்கி தேசு பெருஞ் சின்மோனப் பெருஞ் சுடரே யானென்று சந்தோஷித்து சதா மகிழ்ந்து சிவசிதம்பரமாம் வீட்டில் நிலை பெற்றிருப்பவ ரெவரோ அவரே சிதம்பர நிலையையடைவார். மாசற்ற நெஞ்சுடைய சுகர் முதலிய மகரிஷிகள் சதா உணர்வு கரைந்த தலத்தில் எப்போதும் ஒரே படித்தாய் ஏகவெளியாம் சிவவெளியில் சின்மயமாய்ச் சித்திர தீபம்போ லசைவற நிற்றலே தொழிலென்று கொண்டனர் இவ்வகைத் தொழிலைச் சற்றுந் சீர்தூக்காக் குறைவே மரணமென்கிற வாதனைக்காளாகி அனந்தமான ஜன்மங்கட்கு வித்தாகுவதுமன்றி அருமையான சுத்த அறிவு தன்னிடத்திலுள்ளதை கவனிக்காமல் கவலையே சென்ம சென்மங்கட்கு காரணமென்று பெரியோர் வாக்கின் பேரனுபவத்தை நன்கு பாராட்டுதலன்றோ நன்மக்களியல்பு. கற்பனைகளற்ற வற்புதமாய் நின்ற வொளியன்றோ சிற்சொரூபம். இச்சிற்சொரூபம் தானே தானாகி தனியனுபவமே பேரொளியாய் சகல கேவல நீங்கியதாய் தன்னையன்றி யூன்று நிலை வேறொன்றுமிலதாய் என்றுமுள்ளதாய் நிரதிசய வுணர்வாய் விளங்குகின்றவனன்றோ சிவசிதம்பரமாம் சின்மய வீட்டையவன். அதாவது தான் சிவவியாபக வெளியென்ற வெண்ணம் பக்குவக்குறைவால் மறந்தபின்னர் உலகிற் காணப்படும் பொருளெல்லாம் நித்தியப் பொருளென்றுணர்ந்து

தூயநிலையாம் சாந்தநிலையைக் கைப்பற்றாமல் தூக்கமாம் மரணத்திற் கேதுவாகி தூக்கமே சமாதி யென்று வீண் கழிக்கும் வீணர்களை என்னவென்று கூறுவது. கல்லார் பொய்யென்று நன்கறிந்தாலன்றோ பரிபூரண நிலையை யடைவர். யாவனொருவன் உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசுகிறானோ அவன் அருணிலை யடையவே யடையான். ஏனெனில் கடவுள் நிலை சாந்தத்தில் விளைவது. அச்சாந்தம் சங்கற்பமில்லாவிடத்தில் விளைவது அத்தகையாம் பெரும்பேற்றைத் தன்னிலே தானாகக் காண்பதற்கு புண்ணிய வசத்தாலே அல்லது சத்சங்கத்தாலோ தெரிந்துகொண்டால் அவன் நித்திய சொரூபத்தையடைவது திண்ணம். இது நித்திரைக்கும் விழிப்புக்கும் மத்தியிலுள்ள தலம்.

"உற்ற நினைப்பு மறப்பற்றே னம்மானை
யோவாத சித்தத்தே யொத்தேன்கா ணம்மானை"

"சித்திர தீபத்தே யொத்தேன்கா னம்மானை
சித்தஞ் சலித்திடஞ் சென்மங்கா ணம்மானை"

— திருவம்மானை

சத்தம் பிறக்கச் சகலகலையும் பிறக்கு
மத்த னுரைத்த தறியாமோ — வன்றுரைத்த
சத்தமே சத்தஞ் சஞ்சலமொன் றில்லாத
சித்தமே சுத்தச் சிவம்.

— சந்திரசேகர வாக்கியம்

## 6. அறிவியப்பு

## SUPREME BLISS

(திருவொற்றியூர்)

"மாற்றை யளந்தறிந்தில் மென்றருமாறை etc, etc ஞான சிதம்பரத்தே விளங்கி வளர் சிவமயமாம் பொன்னைக் காற்றனலா காயமெலாங் கலந்த வண்ணம் பொன்னைக் கண்டு கொண்டேன் தனிந்து கொண்டேன் கலந்து கொண்டேன் களித்தே."

திரு அருட்பா பக்கம் 592, செய்யுள் 5.

எல்லாம் வல்ல இறைவன் திரு அருள் பெற்ற சுவானுபூதியுடைய அன்பர்களுக்கு நம் சுவாமிகளின் பேரனுபவம் நன்குவிளங்கும். மன மென்பது சார் போத மெனப்படும். ஏனெனில் மனம் எதைப்பார்க்கிறதோ, அதன் சார்பாய் விடுதல். இங்ஙனம் மன மென்பது காற்றென்றும் விவேக மென்பது அனலென்றும் வியாபக அறிவென்பது சுத்த ஆகாயமென்றனுமாம். உன்னுகின்ற தொழிலையுடைய மனம் காற்றுருவாய் நின்று தீர்க்க சிந்தனையில் அனல் வடிவாகி விவேகமெனப் பேர்வகித்து வியாபக வடிவாய் சுத்த சாதக நிலையில் தன் வன்மை குன்றி, உலக நாட்டமிழந்து காற்றுக்குமேல் மிருதுவ்வான தனமையை

யடைந்திருக்குந் தருவாயில், சுத்த சாந்த உஷ்ணந் தோன்றி இயற்கை வடிவாகி சுயம்பிரகாசமாகி எக்காலத்தும் அழிவில்லாததாய் விளங்கிக்கொண் டிருக்கின்ற உண்மை நிலையெதுவோ அதுவே அறிவியப்பாம். இங்ஙனம் காற்றுக்குமேல் மிருதுவென்பது ஆகாயாகாச மென்பதை யடியறப் பொடியாக்குதல். இவ்வமயத்திலே சீவன் உலக நாட்டம் துக்கமெனக் கண்டு சதா தனி அனுபவமாயிருத்தல். உண்மையறிந்த அனுபவாத்துமாக்கள் எக்காலத்தும் அப்பியாசிக்கு முறை. (1) கண்ணுற் காணுதல் - உன்னுதல் (2) கனிந்து கொளல் - உவத்தல் (3) கலந்துகொளல் - உணர்ந்துருகல்.

மனம் உண்மையை நெருங்குங்கால் அது உண்முகக் கண்ணென்றும் மனம் அழிவில்லாப் பொருளிலே சதா தியானித்தல் உட்கனிதலென்றும் மற்றும் சுத்த மனம் எல்லாவற்றிற்கு முதற் பொருளாயும், எக்காலத்து மழியாததாயுமுள்ள உண்மையிலே மூழ்கியிருத்தல். இந்த ஒளி அனுபவம் ஒன்றே இறவாத வரந்தைப் பெறுதல். இவ்வொளி மூவகையாம். தற்பராபரம்பர சிதம்பர ஒளியுமாம். உண்மை முடிவில் விளங்கும் விளக்கம் வியாபக ஒளிவடிவாம் ஆன்மா. இதைத்தான் மனங்கரைந்த யிடமென்றும் துரிய வெளிநடுநின்ற பெரிய பொருளென்றும் தூய்மை நிலையென்றும் சுத்த சாதகர்கள் கூறுவர். நம் சுவாமிகள் சுத்தசிவ பூரண மெய்யென்றுஞ் சிற்சில இடங்களில் அருட்பாவி லலங்கரித்திருக்கின்றனர். எல்லாவற்றிலும் மனமானது முதன்மையாயிருந்து நம் அறிவைக்கெடுத்து நம்மையும் தன்வசப்படுத்தி சாரதி செய்கின்றது. திரு

அருட்செயல் வன்மையால் நாளடைவில் சுத்த சகவாசத்தின் பயனாலும் நல்லருட் கேள்வியினாலும் பொய்யான விஷயங்களில் மனம் புகாமல் சதா பூரண வியாபக வுண்மையைத் தெரிந்து சிதம்பரமாம் பரம்பரத்தில் தான் ஒளிவெளியா மனுபவமென்று காட்டாமல் உண்மை வடிவே சிவமென்ற அனுபவ நிலையில் ஆழ்ந்திருப்ப தியல்பு.

"He who knows the universe collectively and distinctively, whose Majesty is fully evident in the world,operates within the space of the heart,his luminous abode. He surpasses all human understanding, and is the most predominent. He who irradiates the sun and other bodies, who is smaller than an atom, larger than the world, and in whom is the abode of all the divisions of the universe, and of all their inhabitants is the eternal God. 'Arutjothi' the origin of breath, speech and intellect, as well as of all the senses."

இழிவான எண்ணம் இறந்து இயற்கையாயுள்ள சுத்த விளக்கம் தோன்றியபோது நான் என்கின்ற சொல்லும் அதற்குகந்த அழிவான உலக வாதனையும் மாண்டு அதன் பின்னர் சற்றுநேரத்துக் கெல்லாம் உண்மை அனுபவத்திற் சதா அனுபவித்த விளக்க உண்மையே அறிவானந்தமென்றும் சிதம்பரமாம் பரவெளியில் சின்மாத்திர சந்தர்ப்பத்தில் பட்டணத்திலுள்ள மனிதன் கல்கத்தாவில் இருக்கிறானென்றும் அவன் சொல்லில் முற்றும் உலகம் கௌவிக்கொண்டு அத்தகையோரான சித்தசாமிகள் கடவுள்போல் உலகம் வணங்குவதை கண்ணாற் காண்கிறோம். நாம் சதாகாலமும் அறிவைப் பெற்றவரென்றும் அழிவில்லாதவரென்றும்

எண்ணம் ஊடுருவுதல் வேண்டும். இவ்வகை நீடித்த எண்ணம் ஒருவனுக்கு வாயந்தகாலத்து சரீர அபிமானங்குன்றி ஆன்மலயமான சுத்த ஸ்வரூபியாய் விளங்குகிறவனெவனோ அவனே சுத்தானுபவி. மெய்யென்பது உண்மைநிலை, உயிர்நிலை என்று பிறவாநிலை, தேகத்துக்குள்ளே தோன்றித் தோன்றி மறைந்து மறைந்து விளங்குகின்ற ஒரு தனிச்சுடரே முக்காலத்தும் விளங்கி மூன்னிலை தானேயாகி சரீரம் நாளடைவிற் குன்றி சங்கற்பாதீதமான சுயம்பிரகாசமே அறிவாகி அது விசும்பிற் கலந்தும் கலவாததாயும் உள்ள ஓரனுபவமே அறிவியப்பு.

இவ்வனுபவம் நாளடைவில் பலவித அனுபவத்திற் கிடங்கொடுக்கும் மற்றுஞ் சிலரால் இயற்கையாயுள்ள பஞ்சபூதமும் அதன் சார்பிற்றோன்றும் பற்பல நிகழ்ச்சியும் விசும்பில் விளைந்த விளக்கின் சுடரே சுத்த அறிவென்றும் அது எல்லையில்லாவிடமென்றும் ஏகாந்த தலமென்றும் எல்லாமிறந்த விடமென்றும் மேலோர் கூறுகின்றனர். கட்புலன் வழியில் சுடர் வியாபகம் சில காற்புறத்திற்றோன்றி சிலகாலகத்திற்றோன்றி விளங்கியும் அதன் பின்னர் பகல் காலத்தில் ஆதித்தன் சுடர் வன்மையால் அச்சிறு சிவவொளி தோன்றுமற்றோன்றி உள்வியாபகத்தின் பிரதிபிம்பமாய் விளங்குமென் றறிவோர் கூறுவர். ஒருவன் காலையிலே கண்ட சூரிய வுதயம் மலையுச்சியின் விளங்கும்போது ஆகாயத்தின்கண் விளக்கெறிவது போன்ற தோற்றமே யொழிய எப்படி நெருங்கின காலத்துப் பொய்யாய் முடிகின்றதோ ஆகையால் தோன்றும் நிகழ்ச்சி யெல்லாம் பொய்யாயிருக்கும் அத்தகையுடையவன் மீண்டு மலை

யேறி போகும்போது போகப்போக எப்படி தன் எண்ணமாறி தான் ஓய்ந்தபோது மலையின்கண் விளங்கும் சூரியயோதயமும் சந்திரோதயமும் தன் சிரசினுச்சியில் விளங்கும் உண்மைப் பொருள்களென்றே முடியும்.

சூரியன் சந்திரன் என்பது இருவகை பூதங்களல்ல. ஆனால் தீர்க்க தீர்மானத்தி லொன்றே. ஏனெனில் தான் விளங்கினபோது உண்டாகுமொளி சூரியவொளிதான். அது தானே எக்காலத்தும் நித்தியனென்று எண்ணமுமிறந்தபோது தோன்றுகின்ற சந்திரவொளி தரிசனம் அருட்பெருஞ்சோதி யென்றும் ஆன்றோர் கூறுவர்.

## முக்கிய குறிப்பு

சிறிய எண்ணம் நான், பெரிய எண்ணம் தான், நான் மூழ்கி - சீவபோத மிறந்து, நான் போய் - நினைப்பும் போய், அதுவாகப் பெறுவேனோ - உள்ள சச்சிதானந்த வடிவாவேனோ, காலங்கடந்தது - (எ-து)

நினைப்பு மறப்பற்ற விடத்து, விளங்குஞ் சுக சொரூபம் மேன்மேலுங் காண்பானாகி எல்லாந் தன்னுள்ளடங்கி சர்வம் சிவசொரூபமாகிறான். ஆனால் இத்தகைய மஹா புருடன் இப்பெருஞ் சிறப்பு வாய்ந்த காலத்து ஜனசமூகத்திலும் வியாபாரம் நிரம்பியுள்ள உலகத்திலும் வசிக்காமல் ஏகாந்தமான இடந் தேடுவன். ஏகாந்தமான இடந்தான் ஒளி வெளி தோன்றும். தோன்றுங்காரணம் யாதெனில் மனமானது சங்கற்ப விகற்ப நீங்கி சத்திய வடிவான நிலையே நாமடையும் உயர்வான நிலையென்ற யேக்கம் வாய்ந்த காலத்து தான் நினையாமலே தோன்றும் ஒளி வெளி தன்னிடத்தே

விளங்கிக்கொண்டிருக்கும். மற்றும் தன்னைச் சூழ்ந்தவர்கள் யாராகிலும் இருக்குமிடத்து அது தூரேவிளங்கும். பேரொளியில் தன்னைக் காணுமிடத்து தன்னுருவாம் மின்னல்போன்ற ஓரொளி பரத்தின் கருணையால் சடிதியில் அவாவேசத்தால் தான் ஒளி வெளியிற் கலந்து சரீர எண்ணம் நீங்கிய போதே விதேக முத்தியிலக்கணத்தைப் பெறுவன். பின்வரும் இராமலிங்க சுவாமிகளின் கருத்தாற் செவ்வன விளங்கு மென்பது துணிபு.

1. "சச்சிதானந்த வடிவ நம்வடிவந் தரும திட்டானமற்றிரண்டும் பொய்ச் சிதாபாசக் கற்பனை யிவற்றைப் போக்கியாங் கவ்வடிவாகி யச் சிதாகார போதமுமதன் மேலானந்த போதமும் விடுத்தல் மெய்ச்சிதாம் வீடென்றுரைத்தனை சித்திவிநாயக விக்னேச்சுரனே."

2. "சின் மயவடிவிற் சிதா காயத்திடைத் தன்மயவின்பத் தனி நடம் புரியுங் காரணவெண் குணாகாரவகண்ட பூரண பராபர புனித சிற்பர சிவநிலையிஃதெனத் தெளிவித்தழியா நவ!

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

Printed at the "Aurora Press." Madras — 1926.